

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் நினைவுநாளில், புதுடெல்லியில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி வணங்கினர்.



பெரம்பலூர் சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 18ஆவது பட்டமளிப்பு விழா தனலட்சுமி சீனிவாசன் நிகர்நிலைப் பல்கலைக்கழக கூட்டரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் அ.சீனிவாசன் தலைமை வகித்தார். இந்த விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு, பல்கலைக்கழக அளவில் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற 40 மாணவர்கள் உட்பட 1007 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

### தாராபுரத்தில் அன்னிய செலாவணி மோசடி!

# ஆன்லைன் பண மோசடியில் 3 த.வெ.க. நிர்வாகிகள் சிக்கினர்!

## கோவையில் போலீசார் விசாரணை!

திருப்பூர், ஆக. 10 -

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை சேர்ந்த த.வெ.க. திருப்பூர் கிழக்கு மாவட்ட வாக்குச்சாவடி அமைப்பாளர் சுஜித்குமார், கட்சி நிர்வாகி விடியல் தில்லை முத்து மற்றும் ராஜேந்திரன் ஆகிய மூவரை, ஆன்லைன் பணப்பரிமாற்ற மோசடி தொடர்பாக கோவை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

போலீஸ் தரப்பில் கிடைத்த தகவலின்படி, தாராபுரம் பகுதியில் ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கோவை சைபர் கிரைம் போலீசார், சந்தேகத்திற்கிடமான இணையவழி பணப் பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூவரையும் தாராபுரம் பேருந்து நிலையம் அருகே கைது செய்தனர். பின்னர், அவர்களை தாராபுரம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து ஆரம்பகட்ட விசாரணை மேற்கொண்ட போலீசார், தொடர்ந்து விசாரணைக்காக கோவை சைபர் கிரைம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

விசாரணையில், கடந்த 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் தேர்தல் காலகட்டத்தில் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்து சுமார் ரூ.1 கோடி வரை பல்வேறு தவணைகளாக பெறப்பட்டு, அந்தத் தொகை 50க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு பிரித்து அனுப்பப் பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர், அந்தப்பணம் மீண்டும் மற்றொரு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாகவும், ஒவ்வொரு கணக்கிற்கும் ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை வரவு வைக்கப்பட்டதாகவும் போலீசார் சந்தேகிக்கின்றனர். மேலும், பணம் பெற்றவர்களிடம், “ஒரு லட்சம் ரூபாய்க்கு ரூ.20 ஆயிரம் கமிஷனாக வைத்துக் கொண்டு, மீதமுள்ள ரூ.80 ஆயிரத்தை குறிப்பிட்ட வங்கிக் கணக்கிற்கு அனுப்பினால் போதும்” என்று கூறி, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நபர்களின் வங்கிக் கணக்குகளை பயன்படுத்தி பணத்தை கைமாற்றம் செய்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த வழக்கில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மூலம் ஹவாலா பணம் பெற்று அதை அப்பாவி பொதுமக்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க செய்து பணப்பரிவர்த்தனை செய்ததாக வழக்கு தொடரப்பட்டு சுஜித்குமார் ஏற்கனவே வேலூரில் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் வெளியே வந்ததாகவும், அதன்பிறகும் இணைய வழி நிதி மோசடி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டதாகவும் விசாரணை அதிகாரிகள் சந்தேகிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தச் சம்பவத்தில் சுஜித்குமாருக்கு நெருங்கிய தொடர்புடையவர்களாகக் கூறப்படும் தாராபுரம் கோட்டை மேடு பகுதியைச் சேர்ந்த விடியல் தில்லைமுத்து மற்றும் பொன்னாபுரம் பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் ஆகியோரும் தற்போது போலீஸ் விசாரணையில் உள்ளனர்.

கோவை சைபர் கிரைம் மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு போலீசார், தனி அறையில் வைத்து, பணம் எங்கிருந்து வந்தது, யாருடைய கணக்குகள் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பணம் எதற்காக பரிமாற்றம் செய்யப்பட்டது. இறுதியில் எந்தக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டது. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின் போது இந்த வலையமைப்பில் தொடர்புடையவர்கள் யார்? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, தாராபுரம் பகுதியில் மட்டும் 50க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் இந்தப் பணப் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்ற தகவல் விசாரணையில் வெளியாகியிருப்பதாக கூறப்படுகிறது. இது சைபர் கிரைம் போலீசாரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டைத் தாண்டி கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மத்தியப்பிரதேசம், புதுடெல்லி, பீகார், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களிலும் இந்த நெட் வொர்க் செயல்பட்டிருக்கலாம் என்றும், பல்வேறு வங்கிக் கணக்குகள் வழியாக பணம் கைமாறியிருப்பதாகவும் விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# தமிழினத் தலைவர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

## கழகத்தினர் மலரஞ்சலி செலுத்தினர்!

நீலகிரி, ஆக. 10-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டக் கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார் தலைமையில், மாவட்டக் கழக அவைத் தலைவர் போஜன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாவட்ட கழக பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், உதகை நகரச் செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா, உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியக் கழக செயலாளர் ஜெகதீசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஸ், வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக கழக நிர்வாகிகள் அனைவரும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, ரஹமத்துல்லா, உதகை நகர துணைச் செயலாளர்கள் இச்சுபாய், கிருஷ்ணன், ரீட்டா, பொருளாளர் அனில் குமார், மாவட்டப் பிரதிநிதிகள் கார்திக், வெங்கடேஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நாகராஜ், விஜயகுமார், கீதா, கஜேந்திரன், ரகுபதி, தியாகு, மார்கெட் ரவி, வில்லியம், அமலநாதன், வெங்கடெஷ், மஞ்சுகுமார், சந்திரசேகர், முஜி, செல்வராஜ், சிவகுமார், சித்திக், அருண், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், உதகை நகர இளைஞர் அணி அமைப்பாளர் விஷ்ணுபிரபு, துணை அமைப்பாளர்கள் இம்ரான், யாசர், நகர மன்ற உறுப்பினர்கள் சசிகுமார், மீனா, மேரி புனோரீனா, பிரியா வினோதினி, கிளைக் கழக நிர்வாகிகள் ஸ்டான்லி, ஜமீல், ரஞ்சித், ரவி, பாரதிராஜா, மணிகண்டன், ஹென்றி, கமல், தங்கராஜ், செந்தில், சிவகுமார், பியுலா, விஜயகுமாரி, சர்மிளா, காரதா, சைலா, ஜான், குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள ஜெயலட்சுமி நகரில் குறள் நெறியாளர் கு.பரசுராமன் நினைவு பெரியார் படிப்பகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாவது நினைவு நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் படிப்பகச் செயலாளர் நெல்லுப்பட்டு அ.இராமலிங்கம் தலைமை வகித்தார். திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் உரத்தநாடு இரா.குணசேகரன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தித் தொடர்பாளர் அ. ரகமத்துல்லா மாலை அணிவித்தார். இந்நிகழ்வில் திராவிடர் கழக மாநில மாணவரணி செயலாளர் இரா. செந்தூரப் பாண்டியன், பேராசிரியர் இரா.குட்டிமணி, அமிர்தா திராவிட செல்வம், வெள்ளூர் முருகேசன், மாரிமுத்து, கோவிந்தன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விவசாயச் சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் தெய்வசிகாமணி தலைமையில்

# விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்தனர்!

## விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு சட்டமன்றத்தில் குரல் எழுப்புமாறு கேட்டுக் கொண்டனர்!





சென்னை, ஆக.10-

தமிழ்நாடு விவசாயச் சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் தெய்வசிகாமணி அவர்கள் தலைமையிலான விவசாயச் சங்கப் பிரதிநிதிகள், நேற்று முன்தினம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது, டெல்டாவை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும் - பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தங்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தஞ்சையில் தி.மு.கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காகவும் சட்டமன்றத்தில் குரல்கொடுத்ததற்காகவும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மேலும், விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடியதற்காக, த.வெ.க. அரசின் காவல் துறை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கைது செய்தது, மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

இந்தக் கூட்டு இயக்கத்தில் உள்ள 84 விவசாய அமைப்புகளும், த.வெ.க. அரசு பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யாமல் விவசாயிகளை வஞ்சிப்பதைக் கண்டித்து, பல்வேறு பகுதிகளில் தொடர் போராட்டம் நடத்திவருகிறார்கள்.

அந்த வகையில், தங்களுடைய போராட்டத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறும், சட்டமன்றத்தில் குரல் எழுப்புமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், கழகத் தலைவரின் வழிகாட்டுதலில், சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றும், விவசாயிகளுக்கு என்றும் உற்றத்துணையாக இருப்போம் என்றும், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுக்கு உறுதி அளித்தார்.

### எஸ். அன்புச்செழியன் தலைமையில் - கோவை மாநகர் மாவட்ட

# தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி !

## கே.எம். தண்டபாணி - பி.ஆர்.அருள்மொழி பங்கேற்பு !

கோவை, ஆக.10–

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். அன்புச் செழியன் தலைமையில் கலைஞரின் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தி.மு.க. வழக்கறிஞர்கள் அணி சார்பில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்றம் வளாகம் முன்பு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி 07.08.2026ந் தேதி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர்கள் அணி அமைப்பாளர் எஸ்.அன்புச் செழியன் தலைமை தாங்கினார்.

இந்த நினைவஞ்சலி நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத்தலைவர் மணிவேல், முன்னாள் அமைப்பாளர்கள் ஜி.டி.ராஜேந்திரன். மயில்வாகனன், கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர் அணி தலைவர் ந.கனகராஜ், துணைத் தலைவர் குமணன், நீதிமன்ற துணை அமைப்பாளர்கள் ராஜமாணிக்கம், மதிவாணன் மற்றும் வழக்கறிஞர்கள் பரமேஸ்வரன், அபுதாஹிர், முத்து குமார், கர்ணன், தர்மராஜ், சலீம், ராஜப்பன், மணிமாறன், எஸ்.ரவிச்சந்திரன், வெற்றி, ராஜேஸ் குமார், சந்திரமோகன், யுவராஜ், சந்தானம், நிஜ லிங்கப்பா, குணசேகரன், அமல்ராஜ், முருகானந்தம், தங்கராஜ், அஜய், விஜயகுமார், பத்மநாபன், ஏ.எம்.சரவணன், நூருல் அமீன், பிரசாந்த், தீபக்மது, மோகன், தமிழ் செல்வி, மகேஸ்வரி, கௌரி, திவ்யபாரதி, லலிதா, சத்யபாமா, ராஜபிரியா, சக்ரவர்த்தி, மனோகரன், கோவை மாவட்ட முன்னாள் அரசு வழக்கறிஞர்கள் வி.ரவிச்சந்திரன், சிவக்குமார், கணேசன், கிருஷ்ணமூர்த்தி, விஜயராகவன், கண்ணன், முத்துவிஜயன் உள்பட கழக வழக்கறிஞர்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, புதுக்கோட்டையில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. முன்னதாக கீழ ராஜ வீதியிலுள்ள அண்ணா சிலையிலிருந்து அமைதி பேரணியாக புறப்பட்டு மாவட்ட கழக அலுவலகம் வந்தடைந்தனர். நிகழ்வில் மாநில மாவட்ட நிர்வாகிகள் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, சுப. சரவணன், சு.சண்முகம், கே.ஆர்.என். போஸ், செ.அசோக் பாண்டியன், மேயர் திலகவதி செந்தில், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, மாநகரக் கழக பொறுப்பாளர்கள் துணை மேயர் எம், லியாகத் அலி, வே. ராஜேஷ், ஒன்றியச் செயலாளர்கள் என்.சேட்டு, தென்னலூர் எம்.பழனியப்பன், தவ.பாஞ்சாலன், மு.க. ராமகிருஷ்ணன். ஆர்.ஆர்.சாமிநாதன். சி.சண்முகம், அ.இளங்குமரன்,’ எம்.கோவிந்தராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, செல்லத்துரை மற்றும் எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, சி.அரங்கநாயகம், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, மாநில மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.